**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை:திரு. எஸ். சந்திரசேகர், பி.ஏ., எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, சங்கரன்கோவில்**

**2023-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25ஆம் நாள் செவ்வாய்கிழமை**

***இடைநிலை மனு எண்.1/2019***
***இன்***
***அசல் வழக்கு எண்.148/2016***

1. கோமதிதாய்
2. வெள்ளத்தாய்
3. கோட்டைத்தாய்
4. ராசாத்தி
5. பால்ராஜ்
6. சுஜாதா ... மனுதார்கள்/வாதிகள்

/எதிர்/

1. *செந்துார்பாண்டியன் (இறந்துபோனார்)*
2. அழகுதுரை
3. மணித்தாய்
4. சாமித்துரை
5. சங்கரலிங்கத்தேவர்
6. ராஜதுரை ... 1 முதல் 6எதிர்மனுதார்கள்/ 1 முதல் 6 பிரதிவாதிகள்
7. கோட்டைச்சாமி
8. வேல்முருகன்
9. செல்வக்குமார்
10. திருமலைச்சாமி
11. வெள்ளத்தாய்
12. கோட்டைத்தாய்
13. செல்வகுமார்
14. மகேந்திரராஜ்
15. சசிகலா
16. முத்துப்பாண்டி
17. அழகுதுரை என்ற அமரன்
18. கஸ்துாரி ...7 முதல் 18 எதிர்மனுதார்கள்/ உத்தேச 7 முதல் 18 பிரதிவாதிகள்
19. செல்வி

20. சரஸ்வதி
21. முத்துலெட்சுமி . . . 19-21 எதிர்மனுதார்கள்/இறந்து போன 1ஆம் எதிர்மனுதாரின் வாரிசுகள்

*(இடைநிலை மனு எண்.7/2022-ல் 28.04.2022 அன்று பிறந்த உத்தரவின்படி மனு சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது)*

இம்மனுவானது கடந்த 17.03.2023ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. C. கண்ணன் அவர்களும், 4,5,7,8,10,11 முதல் 18 எதிர்மனுதார்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. புஷ்பராஜ் அவர்களும் முன்னிலையாகியும், 1ஆம் எதிர்மனுதார் இறந்துபோன நிலையிலும், ஏனைய எதிர்மனுதார்கள், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால், தோன்றா தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், இரு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த நிலையில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## <u>உ த் த ர வு</u>

இம்மனுவில் கண்ட 7 முதல் 18 எதிர்மனுதார்களை பிரதான அசல் வழக்கில், 7 முதல் 18 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்திட உத்தரவு பிறப்பிக்கக்கோரி மனுதார்களால் இம்மனு உரிமையியல் விசாரணைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u>:

பிரதான அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரங்கள் கோரி மனுதார்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிர் 1ஆம் எதிர்மனுதார் தனது எதிர்வழக்குரையில், தாவா

சொத்துக்களில் சிலவற்றை இந்நிர் 7 முதல் 18 எதிர்மனுதார்களுக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளதாக கட்சி செய்துள்ளார் என்றும், எனவே, இம்மனுவில் கண்ட 7 முதல் 18 எதிர்மனுதார்களை பிரதான அசல் வழக்கில், 7 முதல் 18 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்திட உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. 5, 7, 10எதிர்மனுதார்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 8ஆம் எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்ட <u>எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதார்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதில்லை என்றும், இந்நிர் உத்தேச எதிர்மனுதார்கள் வழக்கு தபசில் சொத்துக்களை பல்வேறு காலகட்டங்களில் அதன் உண்மையான உரிமையாளர்களிடமிருந்து வருவாய்த்துறை ஆவணங்களை சரிபார்த்து பின்னரே கிரையம் பெற்று, சொத்துக்களை அனுபவித்து வருகின்றனர் என்றும், இந்நிர் எதிர்மனுதார்களை அலைக்கழிவு செய்யவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில்தான் மனுதார்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மற்றபடி மனுதார்கள் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவைகள் என்றும், எனவே, மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்வு காணவேண்டிய விஷயம் யாதெனில்,

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா?

என்பதேயாகும்.

**5.** இரு தரப்பிலும் யாதொரு வாய்மொழி சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிறுத்தவில்லை. இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6. **தீர்வு** :

பிரதான அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரங்கள் கோரி மனுதார்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிர் 1ஆம் எதிர்மனுதார் தனது எதிர்வழக்குரையில், தாவா சொத்துக்களில் சிலவற்றை இந்நிர் 7 முதல் 18 எதிர்மனுதார்களுக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளதாக கட்சி செய்துள்ளார் என்றும், எனவே, இம்மனுவில் கண்ட 7 முதல் 18 எதிர்மனுதார்களை பிரதான அசல் வழக்கில், 7 முதல் 18 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்திட உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதார்கள் வழக்கு தபசில் சொத்துக்களை பல்வேறு காலகட்டங்களில் அதன் உண்மையான உரிமையாளர்களிடமிருந்து வருவாய்த்துறை ஆவணங்களை சரிபார்த்த பின்னரே கிரையம் பெற்று, சொத்துக்களை அனுபவித்து வருகின்றனர் என்றும், இந்நிர் எதிர்மனுதார்களை அலைக்கழிவு செய்யவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில்தான் மனுதார்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் 5,7,8,10 எதிர்மனுதார்கள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

8. வழக்குக் கோப்பினை ஆராய்கையில், அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரங்கள் கோரி இந்நிர் மனுதார்களால் தாக்கல் செய்யப்பட்டு, அது எழுவினா வனைவதற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. இறந்துபோன 1ஆம் பிரதிவாதி, தனது எதிர்வழக்குரையில், இந்நிர் 7 முதல் 18 எதிர்மனுதார்கள் வழக்கு தாவா சொத்துக்களில் சிலவற்றினை கிரையம் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளதால்,

அசல் வழக்கின் தீர்முடிவிற்கு 7 முதல் 18 எதிர்மனுதார்கள் அவசிய தரப்பினர்கள் என மனுதார்கள் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், எதிர்மனுதார்களும் தங்களது எதிருரையில், தாவா சொத்துக்களில் சிலவற்றினை வழக்கிற்கு முன்பே கிரையம் பெற்றுள்ளதை ஒப்புக்கொண்டுள்ளனர். மேலும், பிரதான அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும், தாவா சொத்துக்களில் சில சொத்துக்கள் அசல் வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே இந்நிர் 7 முதல் 18 எதிர்மனுதார்களால் கிரையம் பெறப்பட்டுள்ள நிலையில், எதிர்காலத்தில் பல வழக்குகள் எழாமல் இருப்பதற்கும், அசல் வழக்கின் தீர்முடிவிற்கும் இந்நிர் 7 முதல் 18 எதிர்மனுதார்களை பிரதான அசல் வழக்கில் வழக்கில் கட்சி சேர்ப்பதுதான் நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், பிரதான அசல் வழக்கின் தீர்முடிவுக்கும், மேலும், இவ்வழக்கின் மூலம் வேறு பலதரப்பட்ட வழக்குகள் தோன்றாவண்ணம் இருக்கும் வகையிலும் 7 முதல் 18 எதிர்மனுதார்களை கட்சி சேர்ப்பதுதான் நீதியின்பாற் சிறந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10. ஆனால், அதேசமயம் 1ஆம் எதிர்மனுதார், அசல் வழக்கில் கடந்த 28.06.2017 அன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள நிலையிலும், மனுதார்களால் இம்மனுவானது சுமார் ஒன்னேமுக்கால் வருடங்களுக்குப்பின், அதாவது கடந்த 12.04.2019 அன்றுதான் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதார்கள் தகுந்த செலவுத்தொகை வழங்கும்பட்சம் இம்மனுவினை அனுமதிக்க நிபந்தணையின்பேரில் உத்தரவிடுவதுதான் நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11. இறுதியாக, மனுதார்கள் இம்மனுவின் செலவுத்தொகையாக ரூ.1,000/-ஐ வருகிற 06.06.2023 தேதிக்குள் திருநெல்வேலி மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவில் செலுத்தும்பட்சம் இம்மனு அனுமதிக்கப்படும், தவறும் பட்சம் இம்மனு தானாக தள்ளுபடியாகி நிற்கும். மீண்டும் அழைக்க வாய்தா 07.06.2023.

என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று **2023ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25ல்** அவையறியப் பகரப்பட்டது.

S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2023.04.25 17:55:30 +0530

சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

<u>மனுதார் தரப்பு சாட்சிகள்</u>: இல்லை
<u>மனுதார் தரப்பு சான்றாவணங்கள்</u>: இல்லை
<u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u>: இல்லை
<u>எதிர்மனுதார்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>: இல்லை

S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2023.04.25 17:55:38 +0530

சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**இடைநிலை மனு எண்.*1/2019***
**இன்**
**அசல் வழக்கு எண்.*148/2016***

**உத்தரவு (அசல்/வரைவு)**

**நாள்: *25.04.2023***